# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் 05.06.2025</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 7724/SCIC/2023</u>**

திரு K.R. இராஜாராமன் மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்டபதிவாளர் அலுவலகம், --- பொது அதிகார அமைப்பு
சிதம்பரம்.

## <u>ஆணை</u>

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 07.11.2022 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், சிதம்பரம் என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில். கீரப்பாளையம் கிராமம் புலஎண்.79/8, 79/9A, 79/9B என்று பட்டா வழங்கிய சொத்துக்களின் வழிகாட்டி மதிப்புகளையும் பட்டா வழங்கிய படியே திருத்தம் செய்யும்படி 30.08.2022 தேதியிட்டு கொடுக்கப்பட்ட மனு தொடர்பாக 3 இனங்களில் தகவல்கள் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. பொதுத் தகவல் அலுவலரால் 01.12.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் 28.12.2022 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலரால் 12.01.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து மனுதாரர் 27.04.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப்பெற்ற ஆணையம் SA 7724/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு 26.07.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 31.07.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார். இந்நிலையில் இந்த இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது காணொளிக்காட்சி வாயிலாக விசாரணை செய்யும்பொருட்டு, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் 05.06.2025 தேதியிட்ட காணொளிக் காட்சி விசாரணைக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடியாக ஆஜராகுமாறு மனுதாரருக்கும், ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்று கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் வாயிலாக நடைபெற்ற காணொளிக் காட்சி விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி R. தனலட்சுமி, பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டபதிவாளர் (நிர்வாகம்), மாவட்ட பதிவாளர் அலுவலகம், சிதம்பரம் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் 07.11.2022 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அத்தகவல்களைப் பெற்றுக்கொண்டு மனுதாரர் மனநிறைவுக் கடிதத்தினை அளித்துள்ளதாகத் தெரிவித்து, அதற்கான கடித நகல்களை விசாரணையின்போது ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. மனுதாரரும் சிதம்பரம் மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) அவர்களால் வழங்கப்பட்ட தகவல்கள் தனக்கு திருப்திகரமானதாகவும், முழு மனநிறைவடைந்துள்ளதாகவும் தெரிவித்து ஆணையத்திற்கு கடிதம் அளித்துள்ள நிலையில், **இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 7724/SCIC/2023</u>**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்டபதிவாளர் அலுவலகம்,
சிதம்பரம்.

**<u>மனுதாரர்:-</u>**
திரு K.R. இராஜாராமன்,
த/பெ இராஜகோபால்,
586, முருகன்கோவில் தெரு,
கீரப்பாளையம் அஞ்சல்,
சிதம்பரம் வட்டம்.

Copy to: File TK/PS